பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
06 04 2025 SUNDAY 7 15 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

- உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ராமேஸ்வரம் பாம்பன் பாலம் திறக்கப்பட்டுள்ளது சிறப்பானது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- உலகின் மிகப் பெரிய கட்சியாக பிஜேபி திகழ்வதாக அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

- வக்ஃப் திருத்த சட்டம் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய உதவிடும் என்று ஐக்கிய ஜனதா தளம் கூறியுள்ளது.

- Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மூன்றாவது தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு இந்தியாவின் Payas Jain முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் திருமதி, திரௌபதி முர்மு, போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

முதலில் போர்ச்சுக்கல் செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. Marcelo Rebelo Desousa-வுடன் பேச்சு நடத்துகிறார்.

அந்நாட்டு பிரதமர் திரு. Luis Montenegro-வுடனும், திருமதி, திரௌபதி முர்மு பேச்சு நடத்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஸ்லோவாக்கியா செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. Peter Pellegrini மற்றும் பிரதமர் திரு. Robert Fico ஆகியோருடனும் பேச்சு நடத்துகிறார்.

>>>>><<<<<

உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ராமேஸ்வரம் பாம்பன் பாலம் திறக்கப்பட்டுள்ளது சிறப்பானது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் தமிழில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ராமேஸ்வரம் – தாம்பரம் இடையேயான ரயில் சேவையையும் தொடங்கி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான புகைப்படங்களையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

முன்னதாக, ராமேஸ்வரத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய பிரதமர், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்திருப்பதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (1) 35 செகண்ட்ஸ்)

தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மோடி (2) 35 செகண்டஸ்)

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (3) 39 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அதிகாரத்திற்காக பிஜேபி ஒருபோதும் கொள்கைகளை சமரசம் செய்து கொள்ளாது என்று அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

பிஜேபி நிறுவன தினத்தை ஒட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பிஜேபியின் கொள்கைகள் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்துடன் தொடர்புடையது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகின் மிகப் பெரிய கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்றும் திரு. நட்டா கூறினார்.

>>>>><<<<<

வக்ஃப் திருத்த சட்டம் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய உதவிடும் என்று ஐக்கிய ஜனதா தள் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சஞ்சய் ஜா கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் தமது கட்சி உறுப்பினர்களும் இடம்பெற்றிருந்தாக குறிப்பிட்டார்.

இதுகுறித்து விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஏழை இஸ்லாமியர்களின் உரிமை இந்த சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படும் என்றும் திரு. சஞ்சய் ஜா தெரிவித்தார்.

>>>>><<<<<

நாகாலாந்து முதலமைச்சர் திரு. Neiphiu Rio தலைமையிலான அனைத்து கட்சிக் குழு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை விரைவில் சந்திக்கவுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

நாகாலாந்தில் பல ஆண்டு காலம் நீடித்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில். இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்காக உள்துறை அமைச்சரிடம் நேரம் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

ஒடிசாவின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார.

ஒடிசா மாநிலம், சம்பல்பூரில் பிஜேபி ஆண்டு தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

ஒடிசாவில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன்மூலம், அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

>>>>><<<<<

புதிய மருந்துகளை கண்டுபிடிப்பதில் அறிவியில் ஆராய்ச்சிக் குழுமம் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செயல்பட்டு வரும் இந்த குழுமத்தின் மூன்று ஆய்வகங்களின் இயக்குநர்களுடன் அவர் ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் இந்த ஆய்வகங்கள் ஆற்றிய பணி இன்றியமையாதது என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

பஞ்சாபில் விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி, தாம் மேற்கொண்டு வந்த உண்ணாவிரத போராட்டத்தை விவசாய சங்கத் தலைவர் திரு. Jagjit Singh Dallewal இன்று முடித்துக் கொண்டார்.

வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணய முறைக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திரு. Jagjit Singh Dallewal உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.

மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங்கின் வேண்டுகோளை அடுத்து, அவர் தமது போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

>>>>><<<<<

குஜராத்தில் வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அம்மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

Vishwamitri ஆறு திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வதோதராவில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கு இப்பணிகள் உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆற்றில் செல்லும் நீரின் அளவை 40 சதவீதம் அளவிற்கு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மியான்மரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள், கனமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட Mandalay-ல் கனமழை காரணமாக, தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலநடுக்கத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிகள், கோவில்கள் மற்றும் பாலங்கள் சேதமடைந்தன.

>>>>><<<<<

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக சர்வதேச அமைப்பு ஒன்றை புதிதாக ஏற்படுத்த பிரேஸில் பரிந்துரை செய்துள்ளது.

ஐ.நா-வின் பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு, பிரேஸிலில் நவம்பர் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் கீழ் செயல்படும் குழுமமாக இது திகழும் என்று அந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு இந்த புதிய அமைப்பு உதவிடும் என்றும் பிரேஸில் கூறியுள்ளது.

>>>>><<<<<

Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மூன்றாவது தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு இந்தியாவின் Payas Jain முன்னேறியுள்ளார்.

செக்குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 12-10, 13-11 என்ற செட்கணக்கில் கொலம்பியாவின் Daniel Guete-ஐ வென்றார்.

மற்றொரு இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Abhinandh Pradhivadhi-யும் 11-8, 11-8, 11-8 என்ற செட்ககணக்கில் ஆஸ்திரியாவின் Alexnder Chenn-ஐ வென்றார்.

>>>>><<<<<

கூடைப்பந்து போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியா 76வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>END<<<<<